வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்

தேதி 20.8.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

வெள்ளம், நிலச்சரிவு போன்ற பேரிடர்களை முன் கூட்டியே துல்லியமாக கணித்து, உயிரிழப்புகளை குறைக்க வேண்டியதன் அவசியத்தை குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு வலியுறுத்தி உள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, இன்று புதுடெல்லியில் மலேசிய பிரதமருடன் நடத்திய பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து, இரு நாடுகளுக்கும் இடையே, பல்வேறு உடன்பாடுகள் கையெழுத்தாயின.

டாக்டர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த, உச்சநீதிமன்றம், தேசிய பணிக்குழு ஒன்றை அமைத்துள்ளது.

முன்னாள் பிரதமர் அமரர் ராஜீவ்காந்தி பிறந்த நாளான இன்று புதுச்சேரியில் அன்னாரின் சிலைக்கு, முதலமைச்சர் திரு ரங்கசாமி உள்ளிட்டோர், அரசு சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

*புவி-அறிவியல்*

வெள்ளம், நிலச்சரிவு போன்ற இயற்கை பேரிடர்களை முன் கூட்டியே துல்லியமாக கணித்து, உயிரிழப்புகளை குறைக்க வேண்டியதன் அவசியத்தை குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு வலியுறுத்தி உள்ளார். இன்று புதுடெல்லி குடியரசு தலைவர் மாளிகையில் நடைபெற்ற விழாவில் தேசிய புவி அறிவியல் விருதுகளை வழங்கி உரையாற்றிய அவர் நிலச் சரிவுகளை முன் கூட்டியே கணிப்பதற்கான தேசிய மையம்

கொல்கத்தாவில் அமைக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார். 2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியா மேம்பட, கனிமங்களின் உற்பத்தியில் சுயசார்பை எட்டுதல் அவசியம் என்று குடியரசு தலைவர் வலியுறுத்தினார். பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கும் அதேவேளை, சுற்றுச்சூழலையும் பாதுகாக்கும் வகையில், கனிம வளம் உள்ளிட்ட துறைகளில் பல்வேறு புதுமைகள் மற்றும் சீர்திருத்தங்களை அரசு அமல்படுத்தி வருவதாக அவர் கூறினார். விழாவில் 21 பிரிவுகளில் தேசிய புவி அறிவியல் விருதுகள் வழங்கப்பட்டன. கனிம வளங்களின் கண்டுபிடிப்பு, சுரங்க தொழில் நுட்பம் உள்ளிட்ட துறைகளில் சிறப்பாக பங்களித்த விஞ்ஞானிகளுக்கு, மத்திய சுரங்கத் துறை அமைச்சகம் 1966-ஆம் ஆண்டு முதல், மதிப்பு வாய்ந்த இந்த விருதுகளை வழங்கி வருகிறது.

*மலேசியா*

பிரதமர் திரு நரேந்திர மோடி, இன்று புதுடெல்லியில் மலேசிய பிரதமர் டத்தோ சிரி அன்வர் பின் இப்ராஹிமுடன் பிரதிநிதிகள் நிலையில் பேச்சு வார்த்தை நடத்தினார். இதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையே, தொழிலாளர், வேலை வாய்ப்பு, பாரம்பரிய மருத்துவம், டிஜிட்டல் தொழில் நுட்பம், கலாச்சாரம், சுற்றுலா, இளைஞர் நலன், பொது நிர்வாகம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பு உடன்பாடுகள் கையெழுத்தாயின. பிரதமர் திரு நரேந்திர மோடி பின்னர் மலேசிய பிரதமருடன் இணைந்து செய்தியாளர்கள் கூட்டத்தில் பேசுகையில் இருநாடுகளுக்கும் இடையிலான மேம்படுத்திய கூட்டாண்மை உறவுகளில் கடந்த 2 ஆண்டுகளாக உத்வேகம் அதிகரித்து இருப்பதாகவும், இதை விரிவான கூட்டாண்மை உறவுகளாக உயர்த்த முடிவு செய்யப் பட்டுள்ளதாகவும் கூறினார். இந்தியாவிற்கும்,

மலேசியாவிற்கும் இடையே பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்த இன்னும் பல வாய்ப்புகள் இருப்பதாக அவர் தெரிவித்தார். இந்தியாவின் யுபிஐ பணப் பட்டுவாடாக் கட்டமைப்பை மலேசியாவின் பே-நெட் அமைப்புடன் ஒருங்கிணைக்க இருதரப்புகளும் பாடுபடும் என்று அவர் தெரிவித்தார். முன்னதாக குடியரசு தலைவர் மாளிகையில் இன்று காலை நடைபெற்ற நிகழ்ச்சியில், பிரதமர் திரு நரேந்திர மோடி, மலேசிய பிரதமரை சம்பிரதாய முறையில் வரவேற்றார். தொடர்ந்து மலேசிய பிரதமர் ராஜ்காட் சென்று, தேச தந்தை மகாத்மாகாந்திக்கு மலர் அஞ்சலி செலுத்தினார்.

*ராஜீவ்-மோடி*

முன்னாள் பிரதமர் அமரர் ராஜீவ் காந்தி பிறந்த நாளான இன்று. பிரதமர் திரு நரேந்திர மோடி அன்னாருக்கு புகழாரம் சூட்டி உள்ளார். மக்களவை எதிர்கட்சி தலைவரும் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு ராகுல்காந்தி இன்று புதுடெல்லியில், ராஜீவ்காந்தி சமாதியான வீர்பூமிக்கு நேரில் சென்று மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

*நேரடி நியமனம்*

பல்வேறு மத்திய அமைச்சகங்களில், இணைச் செயலர், துணைச் செயலர் மற்றும் இயக்குநர் நிலையிலான, 45 அதிகாரி பதவிகளுக்கு நேரடி நியமனம் மூலம் ஆள் எடுக்க அண்மையில் யுபிஎஸ்சி வெளியிட்ட விளம்பரத்தை விலக்கிக் கொள்ள மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. நேரடி நியமனம் தொடர்பான நடைமுறைகள், முற்றிலும் இடஒதுக்கீட்டு விதிமுறைகள் உட்பட அரசியல் சாசனத்தின் சமூகநீதி மற்றும் சமத்துவ கொள்கைகளுக்கு ஏற்றதாக அமைய வேண்டும் என்பதே பிரதமர் திரு நரேந்திர மோடியின்

உறுதியான நம்பிக்கை என்று மத்திய பணியாளர் துறை அமைச்சர் டாக்டர் ஜிஜேந்திர சிங், யூபிஎஸ்சி தலைவர் திருமதி பிரித்தி சூடனுக்கு எழுதி உள்ள கடிதத்தில் கூறி உள்ளார். பிரதமரை பொறுத்தவரை, அரசு வேலை வாய்ப்பில் வழங்கப்படும் இடஒதுக்கீடு தான், வரலாற்றுக் காலத்தில் இருந்து தொடரும் அநீதிகளைக் களைந்து அனைவருக்கும் வாய்ப்பளிக்கும் வகையிலான சமூக நீதி கட்டமைப்பின் அடிப்படை ஆதாரம் என்பதால், உயர்நிலை அதிகாரி பதவிகளுக்கான நேரடி நியமனத்தில் இடஒதுக்கீடு இல்லாத நிலையை மறுஆய்வு செய்தல் அவசியம் என்றும் அமைச்சர் கூறி உள்ளார். உயர்நிலை அதிகாரி பதவிகளுக்கான நேரடி நியமனத்தை, 2005-ஆம் ஆண்டில், வீரப்ப மொய்லி தலைமையிலான 2 ஆவது நிர்வாக சீர்திருத்த கமிஷன் ஒப்புக் கொண்டதாகவும், 2013-ஆம் ஆண்டு 6-ஆவது சம்பளக் கமிஷன் பரிந்துரைகள் இதே ரீதியில் தான் அமைந்ததாகவும், திரு ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார். இந்த இரண்டுக்கு முன்பும், பின்பும் பல சந்தர்ப்பங்களில் நேரடி நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டது உண்டு என்றும் முந்தைய அரசுகளின் ஆட்சிக் காலத்தில் தனி அடையாள ஆணையத்தின் தலைவர் பதவி மற்றும் பல்வேறு அமைச்சகங்களின் செயலர் பதவிகளுக்கு, இடஒதுக்கீடு இன்றி நேரடி நியமனம் மேற்கொள்ளப்பட்டதே இதற்கு சான்றாகும் என்றும் அவர் கூறி உள்ளார். 2014-ஆம் ஆண்டிற்கு முந்தைய காலத்தில் உயர்நிலை அதிகாரி பதவிகள் நேரடி நியமனம் மூலம், வேண்டியவர்களுக்கு வழங்கப்பட்ட நிலையை மாற்றி நியமன நடைமுறைகளில் வெளிப் படைத் தன்மையை உறுதிப்படுத்தவே நடப்பு அரசு முயன்று வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

*டாக்டர்-பாதுகாப்பு*

டாக்டர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த, உச்சநீதிமன்றம், தேசிய பணிக்குழு ஒன்றை அமைத்துள்ளது. நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த டாக்டர்கள் அடங்கிய இக்குழு, 3 வாரங்களுக்குள் இடைக்கால அறிக்கையும், 2 மாதங்களுக்குள் இறுதி அறிக்கையும் தாக்கல் செய்ய வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கொல்கத்தா மருத்துவமனை ஒன்றில் பெண் மருத்துவர் ஒருவர் பாலியல் பலாத்காரத்திற்கு ஆளாக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டது பற்றிய வழக்கு மீதான விசாரணைகளின் போது, தலைமை நீதிபதி திரு சந்திரசூட் தலைமையிலான அமர்வு இன்று இவ்வாறு உத்தரவிட்டது. நிறுவன ரீதியில் டாக்டர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த, தற்போதுள்ள சட்டங்கள் போதுமானதாக இல்லை என்றும் கள அளவில் நிலைமைகளை மாற்ற நாடு இனியும் காத்திருக்க இயலாது என்றும் நீதிபதிகள் கூறினர். டாக்டர்களின் பாதுகாப்பிற்கு தேவையான பரிந்துரைகளை வழங்க உச்சநீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டுள்ள தேசியப் பணிக்குழுவில், அறுவை சிகிச்சை நிபுணர் அட்மிரல் ஆர் சரீன், டாக்டர் நாகேஸ்வர் ரெட்டி, டாக்டர் பிரதிமா மூர்த்தி, டாக்டர் சவ்மித்ரா ராவத், பேராசிரியர் அனிதா சக்சேனா, டாக்டர் பத்மா ஸ்ரீவாஸ்தவா உள்ளிட்ட மருத்துவ நிபுணர்கள் இடம் பெற்றுள்ளனர்.

*வேலை நிறுத்தம்-வாபஸ்*

இதற்கிடையே, டெல்லி ராம்மனோகர் லோகியா மருத்துவமனையின் உள்ளிருப்பு மருத்துவர்கள் சங்கம் இன்று வேலை நிறுத்தப் போராட்டத்தை விலக்கிக் கொண்டுள்ளது. டாக்டர்களின் முக்கிய கோரிக்கைகளை அரசு ஏற்றுக் கொண்டதை கருத்தில் கொண்டு, இவ்வாறு முடிவு

செய்யப்பட்டுள்ளதாக சங்க நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர். இதர மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைகளில் உள்ளிருப்பு மருத்துவ சங்கங்களும் போராட்டத்தை இதே போல விலக்கிக் கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

*ஜம்மு-காஷ்மீர்*

ஜம்மு-காஷ்மீரில் அடுத்த மாதம் 18-ஆம் தேதி நடைபெற உள்ள முதல் கட்ட சட்டமன்ற தேர்தலுக்கான தேர்தல் அறிவிக்கை இன்று வெளியிடப்பட்டு, வேட்பு மனு தாக்கல் தொடங்கி உள்ளது. அனந்தநாக், ஷோபியான், குல்காம், ராம்பன், கிஷ்த்வார் மற்றும் தோடா மாவட்டங்களுக்கு உட்பட்ட 24 சட்டமன்ற தொகுதிகளுக்கான இந்த முதல் கட்ட தேர்தலில் வேட்புமனுதாக்கல் செய்ய கடைசி நாள், வரும் 27-ஆம் தேதியாகும். மறுநாள் 28-ஆம் தேதி வேட்புமனு பரிசீலனை நடைபெறும். ஏற்கப்பட்ட மனுக்களை விலக்கிக் கொள்ள கடைசி நாள், ஆகஸ்டு 30-ஆம் தேதியாக இருக்கும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் மொத்தம் உள்ள 90 சட்டமன்ற தொகுதிகளில், எஞ்சிய 66 தொகுதிகளுக்கான தேர்தல், அடுத்த 2 கட்டங்களில் நடைபெறும்.

*எல் முருகன்*

மத்திய அரசு கடந்த10 ஆண்டுகளில், தமிழகத்தின் வளர்ச்சிக்கு 11 லட்சம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கி இருப்பதாக மத்திய தகவல் -ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறி உள்ளார். நெல்லை பாளையங்கோட்டையில், ஒண்டிவீரன் மணி மண்டபத்தில் உள்ள அன்னாரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மெட்ரோ ரயில் தொடர்பான பயன்பாட்டு தணிக்கை அறிக்கையை தமிழக அரசு வழங்கினால்,

உடனடியாக அத்திட்டத்திற்கு நிதி வழங்கப்படும் என்றார். பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை குற்றவாளிகளுக்கு பாரபட்சமின்றி தண்டனை வழங்க வேண்டும் என திரு எல் முருகன் வலியுறுத்தினார். கேள்வி ஒன்றுக்கு அவர் பதில் அளிக்கையில், தேசிய ஜனநாயக கூட்டணி, வலுவான கூட்டணியாக திகழ்கிறது என்றார். இதற்கிடையே, விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் நினைவுநாளான இன்று, தென்காசி மாவட்டம் பச்சேரி கிராமத்தில் உள்ள ஒண்டிவீரன் நினைவுத் தூணில் மாநில அமைச்சர் திரு KK SSR ராமசந்திரன், மாவட்ட ஆட்சியர் திரு கமல் கிஷோர் உள்ளிட்டோர் மலர் அஞ்சலி செலுத்தினர்.

*ராஜீவ் காந்தி*

முன்னாள் பிரதமர் அமரர் ராஜீவ்காந்தி பிறந்த நாள் புதுச்சேரி அரசு சார்பில் இன்று கொண்டாடப்பட்டது. தட்டாஞ்சாவடி ராஜீவ்காந்தி சதுக்கத்தில் உள்ள அன்னாரின் சிலைக்கு, முதலமைச்சர் திரு ரங்கசாமி, பொதுப் பணித் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், சட்டப் பேரவை துணைத் தலைவர் திரு ராஜவேலு, அரசுக் கொறடா திரு ஏகேடி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு கேஎஸ்பி ரமேஷ், திரு பாஸ்கர் என்கிற தட்சிணாமூர்த்தி, திரு லட்சுமி காந்தன், மற்றும் தலைமைச் செயலர், காவல்துறை தலைமை இயக்குநர் உள்ளிட்ட அதிகாரிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். நிகழ்ச்சியின் போது அனைத்து மத பிராத்தனையுடன், பாரதியார் பல்கலைக்கூட ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் தேச பக்தி பாடல்களும் இசைக்கப்பட்டன. பின்னர் முதலமைச்சர் திரு ரங்கசாமி, சத்பாவனா உறுதி மொழியை வாசிக்க அனைவரும் உறுதி மொழி ஏற்றுக் கொண்டனர். புதுச்சேரி அரசின் தலைமைச் செயலகத்திலும், தலைமைச் செயலர் திரு சரத் சவ்கான்,

அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு சத்பாவனா உறுதி மொழி செய்து வைத்தார். தொடர்ந்து அரசுச் செயலர் திரு ராஜு உறுதி மொழியை தமிழில் வாசிக்க அனைவரும் உறுதி மொழி எடுத்துக் கொண்டனர்.

இன்டர்நெட்

நாட்டில் மொத்தம் உள்ள இன்டர்நெட் சந்தாதாரர் எண்ணிக்கை கடந்த நிதியாண்டில், 88 கோடியில் இருந்து, 95.4 கோடியாகவும், பிராட் பேண்ட் சந்தாதாரர் எண்ணிக்கை, 84.6 கோடியில் இருந்து, 92.4 கோடியாகவும் அதிகரித்து உள்ளது. கடந்த நிதியாண்டில் தொலைபேசி சந்தாதாரர் எண்ணிக்கையும் 120 கோடியாக அதிகரித்து இருப்பதாகவும், இது, அதற்கு முந்தைய ஆண்டைக் காட்டிலும் 3 கோடி அதிகம் என்றும், தொலைதொடர்பு ஒழுங்குமுறை ஆணையம், ஆண்டறிக்கையில் தெரிவித்துள்ளது.

ரேஷன் கடை

மத்திய உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி இன்று புதுடெல்லியில், 60 நியாய விலைக் கடைகளை, **ஜன் போஷன்** கேந்திரங்களாக மாற்றுவதற்கான முன்னோடி திட்டத்தை தொடக்கி வைத்தார். சிறுதானியங்கள், பருப்பு வகைகள், சமையல் எண்ணெய், மற்றும் பால் பொருட்களையும் விற்பனை செய்யும் வகையிலான இந்த **மக்கள் ஊட்டச் சத்து மையங்களால்**, நியாய விலைக் கடைக்காரர்களின் வருமானம் உயர ஏதுவாகும் என்று அவர் கூறினார். பொது விநியோக கட்டமைப்பில் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்தும் வகையில், மேரா ரேஷன் மொபைல் செயலி. தர நிர்வாக முறை உள்ளிட்ட வேறு 5 திட்டங்களையுடம், அமைச்சர் இந்நிகழ்ச்சியின் போது தொடக்கி வைத்தார். நியாய விலை கடைகளை நடத்துவோருக்கு எளிதான கடன்

வசதிகளை வழங்க, சிறு தொழில் வளர்ச்சி வங்கிக்கும் அமைச்சகத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றும் கையெழுத்தாகி உள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

வெள்ளம், நிலச்சரிவு போன்ற பேரிடர்களை முன் கூட்டியே துல்லியமாக கணித்து, உயிரிழப்புகளை குறைக்க வேண்டியதன் அவசியத்தை குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு வலியுறுத்தி உள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, இன்று புதுடெல்லியில் மலேசிய பிரதமருடன் நடத்திய பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து, இரு நாடுகளுக்கும் இடையே, பல்வேறு உடன்பாடுகள் கையெழுத்தாயின.

டாக்டர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த, உச்சநீதிமன்றம், தேசிய பணிக்குழு ஒன்றை அமைத்துள்ளது.

முன்னாள் பிரதமர் அமரர் ராஜீவ்காந்தி பிறந்த நாளான இன்று புதுச்சேரியில் அன்னாரின் சிலைக்கு, முதலமைச்சர் திரு ரங்கசாமி உள்ளிட்டோர், அரசு சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

----------------------------------------